மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

27—

விட்டுமனைப் பட்டா

***47639 திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, பொன்னமராவதி பேரூராட்சி, சத்தியா நகர், கொல்லங்காடு, தவாங்குண்டு, பாலமேடு வீதி, வடக்கு புதுவளவு, அடைக்கலங்காத்தான் கோயில் வீதி ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருமயம் தொகுதி, பொன்னமராவதி பேரூராட்சி, சத்தியா நகர், கொல்லங்காடு, தவாங்குண்டு, பாலமேடு வீதி, வடக்கு புதுவளவு, அடைக்கலங்காத்தான் கோயில் வீதி ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்கள் ஆட்சேபகரமான நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வருவதாலும், நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான தடை விதிக்கும் அரசாணைகள், மாண்புமிகு உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற ஆணைகள் அமலில் இருப்பதாலும், மேற்கண்ட இடங்களில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

2016 ஜனவரி 22]

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லார்க்கும், இயலார்க்கும் ஏற்றங்கள் தந்திடும் ஒப்பில்லா தியாகமே, எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பவரைத் தேடித் தேடி உயர்வளிக்கும் ஈரமே, எங்கள் அம்மா; கடல் ஏவிய அலையாயினும், கார்மேகம் ஏவிய மழையாயினும், காற்று வீசிய புயலாயினும், தாய் இருக்க பயமெதற்கு என்று தமிழினத்தைக் காத்து நிற்கும் தமிழர் குலச் சாமியே, எங்கள் அம்மா; கழகத்தை இமயத்து உச்சத்தில் நிறுத்திக் காத்திடும் கவசமாக, சித்திரையில் ஆறாம் முறையும் சிம்மாசனம் அமர்கின்ற வாகையே; (மேசையைத் தட்டும் ஒலி) வானளவு விரிந்த ஈகையே, எங்கள் அம்மா; நான் வணங்கும் தாயுருவத் தெய்வமே, தங்களின் பொற்பாதங்களில் என் வணக்க மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன் அம்மா.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் வளர்ச்சி கண்டிட பல இலட்சம் மக்களுக்கும் பட்டா வழங்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில், திருமயம் தொகுதி, பொன்னமராவதி பேரூராட்சியில், சத்தியா நகர், கொல்லங்காடு, தவாங்குண்டு, பாலமேடு வீதி, வடக்கு புதுவளவு, அடைக்கலங்காத்தான் கோயில் வீதி ஆகிய இடங்களில் 30 ஆண்டுகளாக வீடு கட்டி வசித்து வருபவர்களுக்கு வகைமாற்றம் செய்து பட்டா வழங்க வேண்டும் என மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்காக, அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவதே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித அரசினுடைய நிலையான கொள்கையாகும். இந்தக் கொள்கையின் அடிப்படையிலே ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு வீட்டுமனைகளை தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து மாண்புமிகு இதய தெய்வம்*

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்களுடைய பாதுகாப்பு அரணாக நலன் காத்து வருகின்றார்கள். அந்த வகையில் இந்த ஐந்து ஆண்டுகளில், ஒவ்வோர் ஆண்டிலும் மாண்புமிகுஇதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓர் இலக்கை நிர்ணயித்து, இந்த இலக்கையும் மிஞ்சும் வகையில் பட்டாக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

2011 ஆம் ஆண்டில் 1 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1,21,000 பேருக்கும், 2012 ஆம் ஆண்டில் 1 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1,31,000 பேருக்கும், 2013 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 2,17,000 பேருக்கும், 2014 ஆம் ஆண்டில் 3 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 3,81,000 பேருக்கும், 2014 ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 50,000 இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 31-12-2015 வரையில் 3,35,000 பேருக்கும், ஆக மொத்தம் இந்த ஐந்து ஆண்டுகளிலே 10½ இலட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட இலக்கையும் மிஞ்சி, சுமார் 12 இலட்சம் ஏழையெளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 30 ஆண்டுகாலமாக குடியிருந்து வருகிறவர்களுக்கு பட்டா வகைமாற்றம் செய்ய வேண்டுமென்று கூறினார். ஆட்சேபகரமான புறம்போக்கு இடங்களில், நீர் நிலைகள் உள்ள இடங்களில் பட்டா வகைமாற்றம் செய்ய முடியாது. ஆகவே, ஆட்சேபகரமான இடங்களில் வசிக்கும் மக்களுக்கு, மாற்று இடங்களை மாவட்ட நிருவாகம் சார்பில் அடையாளம் கண்டு, அனுமதி தருவார்களேயானால், மாவட்ட நிருவாகம் உரிய ஏற்பாடுகளைச் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.